# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.92/2024

### அ.சா. 9 (LW 9 )

| **பெயர்** | **திரு. சாகுல் அமீது** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/ பெயர்** | சலீம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **16.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி பிடி வாரண்ட் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேடசந்தூரில் குடியிருந்து வருகிறேன். கறிக்கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. சம்பவம் குறித்து எதுவும் தெரியாது. அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

பூத்தாம்பட்டி பஸ்ஸ்டாப் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. 18.07.2022 அன்று சாயந்தரம் நானும் பாஸ்கரும் பூத்தாம்பட்டி பஸ்ஸ்டாப் அருகே போய்க் கொண்டிருந்த போது அங்கே ஆய்வாளர் 3 பேர்களை கொலை வழக்கு விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், அவர்கள் கொடுத்த வாக்குமூலங்களை ஆய்வாளர் பதிவு செய்து கொண்டார் என்றும் அதில் நானும் பாஸ்கரும் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆஜர் எதிரிகள் தங்களை அழைத்துச் சென்றால் வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை எடுத்து ஆஜர் செய்வதாக கூறியதன் அடிப்படையில் 1ம் எதிரி பிரவின் லாரன்ஸ் இருசக்கர வாகனத்தை எடுத்து ஆஜர் செய்தார் என்றாலும் அதை ஆய்வாளர்

அத்தாட்சியில் கைப்பற்றி அதில் நானும் பாஸ்கரும் கையெழுத்து செய்து விட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 21:06:27 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.